கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் கிருஷ்ணகிரி நகரக் கழகச் செயலாளர் எஸ்.கே. நவாப், நகர்மன்ற தலைவர் பரிதா நவாப் ஆகியோரின் மகன் அமீர் சுஹேல், மாதுளா ஆகியோரின் திருமண விழாவை கிருஷ்ணகிரியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று நடத்தி வைத்து, முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச செய்தியை எடுத்துரைத்து வாழ்த்தினர். அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்டச் செயலாளர்கள் தளி ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ., தே.மதியழகன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், டி.செங்குட்டுவன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இம்மணவிழாவில் கலந்து கொண்டனர்.

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நேற்று (23.11.2023) நடைபெற்ற விழாவில் ரூபாய் 1.21 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 11 கட்டிடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, ரூபாய் 9.26 கோடி மதிப்பீட்டில் 67 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப்பேருரையாற்றினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர்மா.பிரதீப் குமார். உயர் அதிகாரிகள் தேவநாதன், ரமேஷ்குமார், திருமதி.கங்காதாரணி. இலால்குடி ஒன்றியக்குழுத் தலைவர் தி. ரவிச்சந்திரன், ஒன்றியக்குழுத் துணைத்தலைவர் ஆர்.முத்துச்சசெழியன், அலுவலர்கள் வெ.ரவிச்சந்திரன், ஆ.ராஜ்மோகன், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் .க.வைரமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் சேலம் 2 வது மாநில மாநாடு

இளைஞரணி மோட்டார் சைக்கிள் பேரணி

மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ பங்கேற்பு

சென்னை, நவ. 24 - சேலத்தில் நடைபெற உள்ள மாநில இளைஞரணி 2வது மாநில மாநாட்டை ஒட்டி, கன்னியாகுமரியில் துவங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் பேரணி திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் கும்முடிப்பூண்டி, பொன்னேரி சட்டமன்ற தொகுதிகளில் பேரணி நடைபெற்றது. மாவட்டத்திற்குள் வந்த பேரணியை மாவட்ட செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வரவேற்றார். பேரணி பூண்டி ஒன்றியம் ஓதப்பை, சீத்தஞ்சேரி, ஊத்துக்கோட்டை பேரூர், எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் பாலவாக்கம், பெரியபாளையம், எல்லாபுரம் தெற்கு ஒன்றியம் கன்னிகைப்பேர் சோழவரம் வடக்கு ஒன்றியம் ஜனப்பன்சத்திரம், தச்சூர் கூட்டு சாலை கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் புதுவாயல், கவரைப்பேட்டை, கும்முடிப்பூண்டி பேரூர் பொன்னேரி நகரம் அண்ணாசிலை, புதிய பேருந்து நிலையம் மீஞ்சூர் தெற்கு ஒன்றியம், மீஞ்சூர் பேரூர், மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம், வல்லூர் வரை பிரம்மாண்டமாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் இ.ஏ.பி. சிவாஜி மு.பகலவன், ஜெ.மூர்த்தி, எஸ். ரமேஷ், டாக்டர் பரிமளம், ஏ.வி.ராமமூர்த்தி, மீ.வி. கோதண்டன், வெ.அன்பு வாணன், ஜி.ஸ்டாலின், மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்தகுமார், ஆ.சத்தியவேல், எம். எஸ்.கே.ரமேஷ்ராஜ் நா. செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன் ஜான்(எ)பொன்னுசாமி, ஜி.ரவிக்குமார், இரா. அறிவழகன், அபிராமி குமரவேல், க.சு.தமிழ்உதயன், இளைஞரணி கே.வி. லோகேஷ், எம்.முரளி, டி. சங்கர், செ.யுவராஜ், இரா. கதிரவன் எஸ்.ராமஜெயம், வெற்றி (எ) ராஜேஷ், க.சம்பத். எஸ்.கோபி வி.பி.ரவிகுமார், மருத்துவர் வில்சன்நிலவழகன், சசிகுமார், எஸ். சுமன், பழவை அலவி, கோல்டுமணி, கே.ராஜேஷ், ஏ.கே.சுரேஷ், ஜவகர், டி. ஜெ.ஜி.தமிழரசன், என். நெல்சன், எம்.கேசவன். ப.அலெக்சாண்டர், டி.லட்சுமிநாரயணன், பார்த்திப்ன, அரி, ராஜேஷ், தேவராஜ், வழக்கறிஞர் சீனிவாசன், முனுசாமி, அப்புன், ஆறுமுகம், டாக்டர் மா. தீபன், சேதுராமன், ஜெயசித்ரா, அமுதா, வெற்றிச் செல்வி, பத்மாசீனிவாசன், ரத்தினகுமாரி, பா.பரத்குமார், லோகநாதன், யோகி(எ)யோகேஷ்வரன், க.சு.தமிழ்பிரியன், முருகானந்தம், மணிகண்டன், ஆர். யுவராஜ், எஸ்,பார்த்தசாரதி, தனேஷ், ஜெ.என்.எஸ். பாண்டியன், யுகேந்திரன், விக்னேஷ், எம்.எம்.ஆர். பிரபு, நரேஷ், சித்திக், போண்டா சிவா, முகிலன், குமார், பிரபு உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை! சென்னை தென்மேற்கு மாவட்டத்தில்

'கலைஞரோடு நான்' நிகழ்ச்சி! கவிப்பேரரசு வைரமுத்து சிறப்புரை!

தயாநிதிமாறன் எம்.பி. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. பங்கேற்பு!

சென்னை, நவ. 24- சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா வையொட்டி, கலைஞரோடு நான்... எனும் நிகழ்ச்சி (கலைஞரோடு பயணித்தவர்களின் அனுபவம் - கலைஞரின் சாதனைகளை நினைவு கூர்தல்) இன்று (24.11.2023-வெள்ளி) மாலை 6 மணிக்கு மயிலாப்பூர் ஆர்.ஆர்.சபாவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

பகுதிச் செயலாளர்கள் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ., நந்தனம் கி.மதி எம்.சி., கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, வட்டச் செயலாளர் வி.வெற்றிவேல் ஆகியோர் வரவேற்கின்றனர்.

கலைஞருடனான அனுபவங்களையும் அவரது சாதனைகளையும் விளக்கி கவிப்பேரரசு வைரமுத்து, தயாநிதி மாறன் எம்.பி., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். சொற்கோ இரா.கருணாநிதி நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

நிகழ்ச்சியில் ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, மு.சத்யா, கே.மலர், என். அன்பழகன் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் பங்கேற்கின்றனர்.

அ.ரேவதி எம்.சி. நன்றி கூறுகிறார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை ஆற்றுகிறார்!

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, நவ. 24 சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி பகுதி, ஒன்றிய, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி நிர்வாகத்திற்கு விண்ணப்பித்தவர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (24.11.2023 வெள்ளிக்கிழமை) மாலை 5 மணி அளவில் சைதாப்பேட்டை பஜார் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைகளை வழங்கி சிறப்பிக்கிறார்.

எனவே சென்னை தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பகுதி, ஒன்றிய, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட, பகுதி, ஒன்றிய, வட்ட துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி நிர்வாகத்திற்கு விண்ணப்பித்தவர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறன்.

பொருள்: கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா நிகழ்ச்சி குறித்து, நீட் எதிர்ப்பு கையெழுத்து இயக்கத்தை துரிதப்படுத்துதல், சேலத்தில் டிசம்பர் 17 நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டில் பெருந்திரளாய் பங்கேற்பது, இளைஞர் அணி ஆக்க பணி.

இவ்வாறு சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம். வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறை சார்பாக நடைபெற்ற 70வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 2.825 பயனாளிகளுக்கு ரூ21.85 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகள் கடன், மகளிர் சுய உதவி குழு கடன் உள்ளிட்ட பல்வேறு வங்கிக் கடனுதவிகளை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் த.பிரபு சங்கர், மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன்,ஆ.கிருஷ்ணசாமி, ஜெ.கோவிந்தராஜன், கூடுதல் பதிவாளர் மு.முருகன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர்திரு. சண்முகவள்ளி, துணைப் பதிவாளர் த.செல்வி. உள்ளாட்சி பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் , அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சூலூர் செந்தலை கவுதமன் சம்பந்தி

அரும்பாவூர் பெ.குறளன்பன் மறைவு!

சூலூர், நவ.24- சூலூர் பாவேந்தர் பேரவை புலவர் செந்தலை கவுதமன் அவர்களின் சம்பந்தி புலவர் அரும்பாவூர் பெ.குறளன்பன் நேற்று (23.11.2023) இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தனித்தமிழ் இயக்கத்திலும் திராவிடர் இயக்கத்திலும் நீண்ட காலம் பெருமுனைப்புடன் உழைத்த மொழிப்போர் தியாகியும் திருக்குறள் பற்றால் கோவிந்தசாமி எனும் தனது பெயரை குறளன்பன் என மாற்றிக்கொண்டவரும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான பெ.குறளன்பன் நேற்று (23.11.2023) பிற்பகல் 3.30 மணியளவில் இயற்கையெய்தினார். அன்னாரது உடல் அடக்கம் இன்று (24.11.2023) பகல் 12 மணியளவில் சூலூர் மின் மயானத்தில் நடைபெறுகிறது.

மறைந்த பெ.குறளன்பனுக்கு கலாவதி என்ற மனைவியும், மரு.கு.இளந்தமிழன் என்ற மகனும், மரு. கு.இசையமுது என்ற புதல்வியும் உள்ளனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் அறிக்கை!

சென்னை, நவ.24- காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம் மாவட்டச் செயலாளரும், குறு-சிறு நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ. அன்பரசன் தலைமையில் நாளை (25-11-2023, சனிக் கிழமை) காலை 11 மணியளவில் அடையார் அமைச்சர் இல்லத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மாவட்ட துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள். இரு சக்கர வாகன பிரச்சாரப் பேரணி.

2-வது மாநில இளைஞரணி மாநாடு. கழக ஆக்கப் பணிகள்!

இவ்வாறு கோல்டு பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

17 ஆயிரம் பூசாரிகளுக்கு மாத ஊக்கத் தொகை: முதல்வர் - அமைச்சருக்கு நன்றி!

கோவை மாவட்ட பூசாரிகள் மாநாடு!

பி.வாசு தலைமை! பி.என்.லோகநாதன் வாழ்த்துரை!

கோவை, நவ. 24- 17 ஆயிரம் திருக்கோவில் பூசாரிகளுக்கு மாத ஊக்கத்தொகை ரூ.1000/- வழங்கிய தமிழக முதல்வர் அவர்களுக்கும், இந்து அறநிலையத்துறை அமைச்சருக்கும் நன்றி தெரிவிக்கும் விழா மற்றும் கோவை மாவட்ட பூசாரிகள் மாநாடு 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை பேரூர் காமாட்சி கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு மாநிலத் தலைவர் பி.வாசு தலைமை வகிக்கிறார்.

பூசாரிகள் நலச்சங்க ஆலோசகர் கவியரசர் ஆர். என்.லோகநாதன் வாழ்த்துரையாற்றுகிறார்.

காலை 7 மணியளவில் அருணாசலம், முத்துக்குமார், மாரிமுத்து, நாகராஜ், ரங்கன், அய்யாசாமி ஆகியோர் முன்னிலையில் கணபதி ஹோமத்தை வேள்வித் திலகம், சித்தாந்த ரத்ன இராஜேந்திரசிவம் நடத்துகிறார்.

காலை 10.00 மணியளவில் மாநாட்டை சிவா (எ) சிவாசல சுந்தர சிவாச்சாரியர் துவக்கி வைக்கிறார்.

மாநாட்டிற்கு டி.கணேசன், ஞானமாருதி, டி.புருஷோத்தமன், எஸ்.சங்கர், தங்கநாயகி கே.சுந்தரம், என்.ஜெகநாதன், அல்லிமுத்து, பதிமலை எஸ்.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநாட்டில் எஸ்.நரேஸ் குமார் வரவேற்கிறார்.

சென்னை மேற்கு மாவட்டம்

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

பகுதி கழக செயலாளர் மா.பா.அன்புதுரை அறிவிப்பு!

சென்னை, நவ. 24 - சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் குட்பட்ட வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது .

இது குறித்து ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா.அன்புதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி கழக வட்ட செயலாளர்கள் கூட்டம் இன்று (24-11-2023, வெள்ளி கிழமை) காலை: 11.00 மணியளவில் தேனாம்பேட்டை இளங்கோ சாலையில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவை தலைவர் எம்.ஆர். ஜம்புலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர்நே .சிற்றரசு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ, ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்கள்.

இதில் பகுதி கழகத்திற்கு உட்பட்ட அனைத்து வட்ட செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்

பொருள் : இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் நீக்கல் இடமாற்றம் சரிபார்த்தல், நீட் விலக்கு கையெழுத்து பெறும் நிகழ்வு மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் மேம்பாட்டு முகமை நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சியுடன் சென்னை சீர்மிகு நகரத் திட்டம் ஆகியவவை இணைந்து சென்னை பள்ளிகளை நவீன வசதிகளுடன் தரம் உயர்த்திடும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் AFD மற்றும் NIUA உயர்மட்டப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினருடன் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ் ணன், இணை ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், துணை ஆணையாளர் திருமதி ஷரண்யா அறி, AFD (Agence Francaise De Developpement மற்றும் NIUA (National Institute of Urban Affairs) குழுவின் உயர்மட்டப் பிரதிநிதிகள் திருமதி ஜூலியட் லிபன்னேரர் திருமதி டயானே பிட்டர், நாயிம் கெருவாலா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வே. குமரேசன்

நவம்பர் 24 (2006)

இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, ஆர்.கே.நகர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

17வது வட்டக் கழகச் செயலாளராகவும் – பகுதி துணைச் செயலாளராகவும் – பகுதி செயலாளராகவும், பின்னர் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

வண்ணாரப்பேட்டை பால் நுகர்கோவர் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், நாம்கோ இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

1962 – விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் – இலங்கைத் தமிழர் ஆதரவுப் போராட்டம் போன்ற கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.